# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,816 — 1930 ம் ௵ கார்த்திகைமீ 28 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கடுவெல கிணறு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 20,121. குறிச்சி—கடுவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மினிக்கொட்டுவவத்த | தென்னந்தோட்டத்தி னோர் பகுதி, ஒரு கிணறும், படிக்கட்டும், ஒரு தூணு முள்ளது | ஏ. ஜே. அல்விஸ், கொறதோட்ட | 0 0 2·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலருந் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ தை மாசம் 6 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1930 ம் ௵ கார்த்திகைமீ 21 ந் உ.

ஈ. டபிள்யு. கன்னங்கர,
மேலதிக அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாபொடையில் ஒரு பிரசித்தமான மலங்கழிக்கும் இடம் கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 20,096. குறிச்சி—பகாலநாபொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | றதாகேவத்தை வரி இல. 76 | தோட்டம் (வெறும் நிலம்) | பகால நாபொடையிலிருக்கும் கே. குனேறிஸ் பிறனாந்து, கே. சிதாறிஸ் பிறனாந்து, கே. வஸ்தியன் பிறனாந்து, கே. ஏமானிஸ் பிறனாந்து, நாயகே சயினை, கே. மாட்டின் பிறனாந்து, கே. மர்தேனிஸ் பிறனாந்து, கே. லூயிஸ் பிறனாந்து, கே. ஹஸ்றின் பிறனாந்தும். வாதாடுவோர்கள் மகாகமவிலிருக்கும் பீ. ஏ. எவ். விமலசுறெந்தறவும், பகால நாபொடையிலிருக்கும் டபிள்யு. சாதிறிஸ், எச். ஜென்னவும், கிரிக்கோலையிலிருக்கும் டபிள்யு. மைசோ | 0 0 2·2 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | நதாகேவத்தை வரி இல. 75 | தோட்டம் (வெறும் நிலம்) | கே. மெசோ, கே. றண்டோ. வாதாடுவோர்கள் மகாகமவிலிருக்கும் பீ. ஏ. எவ். விமலசுறன்தற (டபிள்யு. சாதிறிஸ், டபிள்யு. சண்டோ, எச். ஞென்ஞ, பகால நாபொடையிலிருப்பவர்கள்). கிரிக்கோலேயிலிருக்கும் டபிள்யு. மைசோ என்பவரும் | 0 0 2 |
| 3 | ஷெ .. | ஷெ .. | ஷெ .. | 0 0 1·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞு-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1930 ம் ஞு மார்கழி மாசம் 22 ௳ தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு தெபுவனை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடக்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1930 ம் ஞு கார்த்திகைமீ 22 ௳ ௨.

எல். எல். அன்றர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மெற்றிடெனியாவில் ஓர் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 8,164. குறிச்சி—கற்றியல்வெல, உடசியபத்து தெற்கு உடதும்புற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 8 | கொடபித்தருபெலகெதர .. | தோட்டம் .. | வை. ஜி. அப்புகாமி | 0 0 14 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஞு ஜனவரி மாசம் 9 ௳ தேதியிலன்று 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1930 ம் ஞு நவம்பர்மீ 25 ௳ ௨.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வெருகல் கண்டி றோட்டை மூதூர்துறையில் திருத்துவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,652. குறிச்சி—மூதூர் (தமிழ்).

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | வேடமுரந்துக் காட்டுச்சேனை அல்லது முகத்துவாரத்துக்காடு | வெறுநிலம் .. | சீ. தாமோதரம்பிள்ளை .. | 0 0 36 |
| 2 | — .. | றோட்டு .. | ஷை .. | 0 0 25·1 |
| 3 | வேடமுரந்துக் காட்டுச்சேனை அல்லது முகத்துவாரத்துக்காடு | வெறுநிலம் .. | ஷை .. | 0 1 3·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1930 ம் ஞு மார்கழி மாசம் 22 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு திருக்கோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருக்கோணமலைக் கச்சேரி,
1930 ம் ஞு கார்த்திகைமீ 25 ௳ ௨.

நீ. ஜீ. விலெற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டமன்வரயில் ஒரு கிணறு போடுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 2,925. குறிச்சி—டம்மன்வா, றில்பொல கோறளை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கம்மல்வத்தை .. | பழைய தோட்டத்தின் ஒரு பங்கு (வெறும் நிலம்) ஒரு கல்லுக் கிணறு உண்டு | றட்டுநாயக்க முடியான்சலாக்கே குதுகாமி, டம்மன்வர பழைய ஆராட்சியார் | 0 0 0·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஞு ஜனவரி மாசம் 9 ௳ தேதியிலன்று சாயந்திரம் 2.45 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத்தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1930 ம் ஞு நவம்பர்மீ 24 ௳ ௨.

ஈ. நீ. மில்லிங்டன்,
ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டு.

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1931 ம் ஆண்டு ஜனவரிமீ 1 ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்கு சேபேற்றும் லெமொனேட்டும் ஒன்று அல்லது இரண்டு கைவண்டிகளில் கொண்டுவந்து சாமேஸ் கிரனறி (Chalmers Granaries) வளவிலும், ஒரு கைவண்டியில் மானிங்மாக்கெற் (Manning Market) வளவிலும் விற்க உடன்படுவோருடைய கேள்விப்பத்திரக் கடதாசிகள் 1930 ம் ஆணடு டிசம்பர்மீ 10 ந் திகதி புதன்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். மாதிரிக் கேள்விக்கடதாசிகளும் மற்றெல்லா விபரங்களும் கொழும்புத் துறைமுகச் சங்கக் காரியதரிசியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கேபெற் கே. ஒலியர்,
கொழும்புத் துறைமுகச் சங்கத் தலைவருக்காக.

கொழும்புத் துறைமுகச் சங்கக் கந்தோர்,
1930 ம் ஸ்ரீ நவம்பர்மீ 18 ந் திகதி.

---

"உப்பு ஏற்றுமதி பண்ணிக் கொடுக்க" வென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தள உதவி ஏசன்றுத்துரை அவர்களால் 1930 ம் ஆண்டு மார்கழி மாதம் 8 ந் திகதி பகல் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1930 ம் ஆண்டு பெரும்போகம் உப்பு செய்கை பண்ணிச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் உப்பை, கொட்டுக்களில் கிழக்கு உப்பள ஓரத்தில் கிழக்கு உப்பளத்தில் அமைத்திருக்கும் மேடையின் குவியல்களுககிடையில் ஏற்றுமதிபண்ணிடிருல்லிப் பெட்டிகளில் ஒப்புக்கொடுக்க.

கேள்விக்காரர்கள் இதன் பின்னுல் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டும் :—

(1) சாக்குகளின் வாய்கள் மூடிக்கட்டி ஏற்றுமதி செய்கிறதற்கு 1,000 அந்தர் உப்புக்கு மேடை வாசலில் சிறு வண்டில்களில் ஒப்புக்கொடுத்துப் பிற்பாடு குவியல்களுக்கிடையில் சேர்ப்பதற்கு என்னவீதம் என்று விபரித்துக் காட்டவேண்டும்.

(2) கேள்விக்காரர் உப்பளத்தில் நாள் வீதம் குவியல் மேடைக்கு 1,000 அந்தர் உப்புகொண்டுவந்து கொடுக்க வேணும். கேள்விக்காரர் மேற்படி கொண்டுவரத் தவறின ஒவ்வொரு நாளைக்கும் ஐந்து ரூபாவுக்கு அதிகரியாமல் உதவி ஏசண்டர் துரையவர்கள் விருப்பப்படி தெண்டம் அடிக்கப்படுவார்கள்.

(3) வேலைகள் கூடியளவு கெதியாய் தொடங்கப்படும்.

(4) ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் இறைசேரியில் ஆவது அல்லது எந்தக் கச்சேரியிலாவது 100 ரூபா கட்டி பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரத்தோடு அணைக்கவேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கொந்திருத்தைச் சரியாய் நடப்பிக்கிறதற்கு 500 ரூபாய் கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட பிணை கொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினல் இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத பணம் கேள்விக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

(5) கொந்தீசு அல்லது கடிதங்களைப்பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விக்காரனும் தனக்குப் பதிலாய்ப் புத்தளத்தில் ஓர் பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்க வேண்டியது.

(6) இந்தக் கொந்திருத்து சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டும்.

(7) கேள்வியின் வீதங்களையிட்டு ஏதேன் மாற்றுதல் அல்லது திருத்தங்கள் பண்ணினல், அந்த இடத்திலே கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

(8) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோந்த வருமானக் காரியத் தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசென்றுத்துரை யவாகளுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் மூலமாய் அனுப்பவேண்டும்.

(9) கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் அன்று கேள்விக்காரர் கச்சேரியில சமுகமாயிருக்க வேண்டும்.

(10) பிணை உடன்படிக்கை கடுதாசிகள் சரிபிழை பார்க்கும் முடியின் தரணியின் சிலவுகள் அனுகூலப்படும் கேள்விக்காரனல் கொடுக்கப்பட வேண்டும்.

(11) வண்டிகளில் ஏற்றமுன் உப்புச் சாக்குகளின் வாய்கள் கொட்டுகளில் தானே கட்டப்பட வேண்டும்.

(12) கவுண்மேந்தார் வைத்திருக்கும் தவறுபோன கொந்திருத்துக்காறருடைய டாப்பிலே கேள்விக்காறர் ஆருடைய பெயர் என்ருலும் வேறை யாருடனும் ஒன்றித்தாவது அல்லது தனியே ஆவது இருந்தால் அவருடைய கேள்வி ஏற்கப்பட மாட்டா. அப்படியிருக்கும் ஆட்கள் ஆருக்கென்ருலும் கேள்விக்காறர் தத்துவம் கொடுக்கப்படாது அல்லது அவையை தங்களுக்குகீழ் வேலைசெய்கிறதற்கு ஏற்கப்படாது. புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்கள் தனக்கு நியாயமாகத் தெரிந்து எழுத்தில் அறிவித்தால் அப்படி அறிவிக்கப்படும் பெயர்வழியுள்ள ஆட்களையும் ஏற்கப்படாது.

(13) இன்னும் ஏதேன் இவைகளைப்பற்றிய விபரங்கள் அறியவிரும்புவோர் புத்தளம் உப்புத்துரை இடம் அறிந்து கொள்ளலாம்.

(14) மேற்சொல்லப்பட்ட விதிகளைச் சரியாக அனுசரிக்காத எந்தக் கேள்விப்பத்திரராவது ஏற்றுக்கொள்ளப்படாது.

(15) புத்தளம் உதவி ஏசண்டர் துரை யவர்களின் உத்தரவின்றி உடன்படிக்கையை இன்னெருவருக்குக் கொடுக்கவாவது அல்லது சாட்டுதல்பண்ணவாவது கூடாது.

(16) எந்தக் கேள்விப்பத்திரங்களையாவது அல்லது ஒன்றில் எப்பகுதியையாவது கேள்வியில்லாமல் தள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ கொவர்ணமேதாருந்க்குத் தத்துவமுண்டு.

கெ. ஆள்வாப்பிள்ளை,
உதவி ஏசன்றருக்காக.

புத்தளம் கச்சேரி,
1930 ம் ஆண்டு கார்த்திகைமீ 19 ந் திகதி.

---

## அறிவித்தல்.

இலங்கை தென் மாகாணம் காலி டிஸ்திறிக் வெந்தன்ன வளலா விற்றிக்கோறளை கொஸ்கொடையில் இருக்கும் அகம்பொடி அலடின் டிசொயிசாவாகிய நான் இலங்கை அரசாட்சியாரின் 1907 ம் ஆண்டு 1 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் செடியூல் 1B ன் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குள் அனுராசபுரப் பிரிவில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாயிஸ்வர்க வேலைபார்க்கிறதற்கு றிஜிஸ்ருர் ஜெனறல் அவர்களுக்கு மனுச்செய்வே னென்று இத்தால் விளம்பரப் படுத்துகிறேன்.

கையொப்பம். எ. எ. டி. சொயிசா.

1930 ஸ்ரீ நவம்பர்மீ 27 உ.

---

## அரசாட்சியாரின் விளம்பரம்.

U 298/30.

### 1898 ம் ஆண்டின் லோக்கல் போட் கட்டளைச் சட்டம்.

அனுராசபுரப் பட்டணத்தின் விஷயத்தில் லோக்கல் போட் சங்கத்தவரால் 1898 ம் ஆண்டின் லோக்கல் போட் கட்டளைச் சட்டத்தின் 56 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்டு அதிகாரமந்திர சபையாரின் ஆலோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

பீ. எச். புடில்லியன்,
கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1930 ம் ஆண்டு நொவம்பர்மீ 26 ந உ.

### உபவிதி.

பிரதான சட்டத்தோடணைக்கப்பட்ட D அட்டவணையின் 10 ம் அதிகாரத்திலுள்ள (56) (16) ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட உபவிதிகளில் 1 ம் உபவிதியில் ஏற்படுத்தியிருக்கும் வண்ணம் பட்டியில் அடைக்கப்பட்ட எநத மாட்டினதும் சொந்தக்காரனிடமிருந்து அல்லது அம்மாடு தனக்குரியதெனச்சொல்லுபவரிடமிருந்து ஒவ்வொரு மாட்டுக்கும் ஒவ்வொருமுறைகொடுக்கும் தீனுக்கு $12\frac{1}{2}$ சதம் அறவிடப்படும.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.